# சப்பிரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம்

## முதலாம் தவணைப் பரீட்சை - 2016

கத்தோலிக்க திருமறை - 7

இரண்டு மணித்தியாலங்கள்

சுட்டெண்:.........................................

## பகுதி - I

**01. மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.** (1 × 40 = 40 புள்ளிகள்)

**1.** இறைவாக்கினரை எபிரேய மொழியில் எப்படி அழைப்பர்?
1. அல்லா 2. நபி 3. பிறொவ்படெஸ்ட் 4. ஆயன்

2. பெரிய இறைவாக்கினருள் அடங்காத ஒருவர்?
1.எசாயா 2. எரேமியா 3.மீக்கா 4. எசேக்கியேல்

3. தாவீது அரசன் செய்த பிழையை சுட்டிக் காட்டிய இறைவாக்கினர் யார்?
1.எலியா 2. எலிசா 3.எசாயா 4. நாத்தான்

4. சிரிய மன்னனின் படைத் தலைவனின் பெயர் என்ன?
1.நாமான் 2.சீமான் 3.ஆகாய் 4. உரியாஸ்

5. எலியா இறைவாக்கினர் உண்மை இறைவாக்கினருக்கு பலி செலுத்திய மலை எது?
1.சீனாய்மலை 2.இமயமலை 3.கார்மேல்மலை 4.ஒரேப்மலை

6. எரேமியா என்ற பெயரின் அர்த்தம் என்ன?
1 ''இறைவன் உயர்த்தியுள்ளார்'' 2 இறைவன் மீட்டுள்ளார்.
3 இறைவன் மீட்கிறார். 4 இறைவன் அழைக்கிறார்.

7. ''ஐயோ, நான் அழிந்தேன், ஏனெனில்.....................உதடுகள் கொண்ட மனிதன் நான்''
மேலே உள்ள இடைவெளிக்கு பொருத்தமான சொல்
1.தூய்மையான 2.தூய்மையற்ற 3.நேர்மையான 4.உண்மையான

8. ஆபிரகாமுக்கு எத்தனை வயதான போது மகன் பிறந்தார்?
1. 65 2. 100 3. 85 4. 75

9. ஆபிரகாமின் மனைவி பெயர் சாராள் போல ஈசாக்கின் மனைவியின் பெயர் என்ன?
1.ரெபேக்கா 2. லீயாள் 3. ஆகார் 4. இராக்கேல்

10. ஒரு பெரிய மீனின் வயிற்றில் 3 நாட்கள் உயிர் வாழ்ந்த இறைவாக்கினர் யார்?
1.ஆமோஸ் 2.ஒசேயா 3.ஆபிரகாம் 4.யோனா

**<u>பின்வரும் சொற்களை வைத்து இடைவெளி நிரப்புக</u>**

(ஆட்டுக்கிடாயை / திருமுழுக்கு / இறைவன் மீட்கிறார் / ஆமோஸ் /எலியா)

1. எசாயா என்ற பெயருக்கு………………………என்பது அர்த்தமாகும்
2. சமூக நீதியின் இறைவாக்கினர் என்னும் பெயரை பெற்றவர் ……………………
3. ஆபிரகாம் தம் மகனுக்கு பதிலாக……………………பலியிட்டார்.
4. எலிசா……………………………பின்பற்றி இறைவாக்கினராகப் பணியாற்றினார்.
5. நாம்……………………… பெற்றுத் திருச்சபைக்குள் இறைவாக்கினர்களாக அருட் பொழிவு செய்யப்பட்டுள்ளோம்.

5×2=10

**சரியாயின் ( √ ) எனவும், பிழையாயின் ( × ) எனவும் அடையாளம் இடுக.**

1. செக்கரியா பெரிய இறைவாக்கினருள் ஒருவர் ஆவார். ( )
2. ஆபிரகாம் குலமுதுவர்களின் தந்தை ஆவார். ( )
3. கானான் நாட்டிலே மக்கள் தம் தலைச்சன் பிள்ளைகளை இறைபலியாக வேறு தேவர்களுக்கு ஒப்புக் கொடுத்தார்கள். ( )
4. ஈசாக்கின் மூத்த மகன் "ஏசா" ஆவார். ( )
5. ஆபிரகாம் கடவுளுக்கு பிரமாணிக்கம் இல்லாமல் வாழ்ந்தார். ( )

5×2=10

## பகுதி---2

**விரும்பிய ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

1. அ. பிதாபிதாக்களின் பெயர்களை தருக?
   ஆ. குலமுதுவர் ஆபிரகாமுக்கு கடவுள் கொடுத்த மூன்று ஆசீர்களும் எவை?
   இ. ஆபிரகாமின் வாழ்வில் இருந்து நீர் கற்றுக்கொள்ளும் படிப்பினைகள் ஐந்து தருக?

2. அ. பெரிய இறைவாக்கினரில் மூவரின் பெயர்களை குறிப்பிடுக?
   ஆ இவற்றில் ஒருவரின் அழைப்பை சுருக்கமாக தருக?
   இ. நீர் உம்மில் வளர்த்துக்கொள்ள வேண்டிய தலைமைத்துவ பண்புகள் ஐந்து தருக?

3. அ. தாவீது அரசன் செய்த தவறு என்ன?
   ஆ அவர் செய்த தவற்றை சுட்டிக் காட்டிய இறைவாக்கினரையும் அவர் கூறிய கதையையும் சுருக்கமாக தருக?
   இ. உமது வாழ்வில் நல்ல கிறிஸ்தவனாக மாற நீர் கடைபிடிக்க வேண்டிய விடயங்கள் ஐந்து தருக?

4. அ. ஈசாக் என்பதன் பொருள் என்ன?
   ஆ. ஆபிரகாம் தம் மகன் ஈசாக்கை பலியாக்க கத்தியை கையில் எடுத்த போது கடவுள் கூறியது என்ன?
   இ. ஈசாக்கின் வாழ்வில் இருந்து நாம் கற்றுக் கொள்ளும் படிப்பினைகள் ஐந்து தருக?

5. அ பஞ்ச காலத்தில் கடவுள் எலியாவை எவ்வாறு பராமரித்தார்?
   ஆ கார்மேல் மலையில் எலியா செய்த புதுமை என்ன?
   இ. நீங்கள் இறை பராமரிப்பை அனுபவித்த ஒரு சந்தர்ப்பத்தை எழுதுக?

6. விரும்பிய இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக
   அ இறைவாக்கினர் யோனா
   ஆ. இறைவாக்கினர் ஆமோஸ்
   இ. இறைவாக்கினர் ஒசேயா
   ஈ. குலமுதுவர் ஆபிரகாம்.